1998 ஏப்ரல் 22]

431—

மதுரை மாநகரைச் சுற்றி சுற்றுச் சாலை அமைக்கும் திட்டம்

*9105— திரு. ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாநகரைச் சுற்றி ரிங்ரோடு (சுற்றுச் சாலை) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகரைப் சுற்றி ரிங்ரோடு அமைக்கும் பணிக்குத் தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள திட்டம் தயாராக உள்ளது, உலக வங்கியின் ஒப்புதலோடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரத்தைச் சுற்றி, சுற்றுச் சாலை அமைக்கிற திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்க வேண்டிய சாலையின் நீளம் 26 கிலோ மீட்டர், இதற்குத் தேவையான மதிப்பீடுகள் இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இறுதி மதிப்பீடுகள் தயாரிக்கும் போதுதான், அதனுடைய துல்லியமான தொகையை சரியாகச் சொல்ல முடியும். இந்தத் திட்டம் உலக வங்கியினுடைய ஒப்புதலோடு நிறைவேற்ற வேண்டிய திட்டம், அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசினுடைய அனுமதியைப் பெற்று, அதற்குப் பின்னாலேதான் மதிப்பீட்டினை தெளிவாகத் தெரிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற சாலையின் நீளம் 26,7 கிமோ மீட்டர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தச் சுற்றுச்சாலை ஏற்படுத்துவதற்கான திட்டத்திலுள்ள நிலங்களை வைத்திருக்கிற நிலச் சொந்தக்காரர்களுக்கு பணத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நிலத்தைக் கையகப்படுத்துகிற போது. அரசு ஒரு தொகையை நிர்ணயித்து, அந்தத் தொகையை நிலத்தின் உரிமையாளர்களுக்கு வழங்கி வருகிறது. அந்த அடிப்படையிலேதான் பணிகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரிலே நெரிசலைத் தவிர்ப்பதற்காக சுற்றுச்சாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், எப்போது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ? எந்த ஆண்டு முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியை பொறுத்த மட்டிலே. இங்கே நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல. பெரும்பாலான நிலங்களைக் கையகப்படுத்துகிற பணிகள் முடிந்து விட்டன. திட்ட மதிப்பீடுகள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான காலக்கெடு என்ன என்பதை நாம் இப்போது இறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், மிக விரைவிலே இதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. மதுரையினுடைய தேவையை, அங்கே இருக்கிற நெருக்கடியை இந்த அரசு நன்றாக அறியும், ஆகவே அதற்கான பணிகள் மிகவிரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரம் ஒரு பழமை வாய்ந்த கோயில் நகரமாக இருக்கிறது, அந்த நகரிலே நாளுக்கு

1993 ஏப்ரல் 22]

நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இன்றைய சூழ்நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச்சாலை அமைக்கும் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். அந்த சுற்றுச் சாலை எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றது? அது நகரில் எந்த இடத்தில் முடிகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்சமயம் கையகப்படுத்தப் பட்டுள்ள இடங்களில் முதல் கட்டமாக 5,5 கிலோ மீட்டர் நீளத்திற்கு திருச்சி-மேலூர் மதுரை சாலை கிலோ மீட்டர் 445/10-ல் பிரிந்து மதுரை-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை நம்பர் 19 கிலோ மீட்டர் 4,10 என்ற இடத்தில் இணையும் வகையில் இப்போது அந்த வேலை தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 432, திரு. பி. சொக்கலிங்கம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

432.—

மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப்பாதை கடந்து செல்லும் இடத்தில் போக்குவரத்து பாதிப்பு.

*11784—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம்—ஆனாம்பேடு சாலையில் இருப்புப் பாதை கடக்கும் இடத்தில் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில், அங்கு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.